2003 ஏப்ரல் 28]

நிலையில் இருக்கிறார்கள். நம்முடைய இந்த அண்ணா கலையரங்கத்திலும்கூட தொகை அதிகமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. குறைந்த கட்டணமாக, ஒரு நாளைக்கு ரூ.300/- வாடகை என்கிற வகையில், இந்தக் கலையை வளர்க்கின்ற முகத்தான் அங்கே கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு, பொது நிறுவனங்களுக்குக் கொடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கையை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 356, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

356—

சித்திரைப் பொருட்காட்சி

***36019—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரில் பொழுதுபோக்கு வசதியில்லாமையால், 50 ஏக்கர் பரப்பளவில் மதுரை சித்திரைப் பொருட்காட்சியை நிரந்தரமாக அமைக்க இடம் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசாணை (நிலை) எண் 233, செய்தி மற்றும் சுற்றுலாத் (பொருட்காட்சி) துறை, நாள் 24-12-1996-ன்படி அரசுப் பொருட்காட்சி மதுரையில் ஆண்டுதோறும் ஏப்ரல்-ஜூன் திங்களில் 45 நாட்கள் நடைபெற்று வருகிறது. மதுரையில் சித்திரைப் பொருட்காட்சி, மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான தமுக்கம் மைதானத்தில், பொருட்காட்சியில் கிடைக்கும் நிகர வருவாயில் 50 சதவீதம் மதுரை மாநகராட்சிக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நடைபெற்று வருகிறது. எனவே 50 ஏக்கர் பரப்பளவில் மதுரை சித்திரைப் பொருட்காட்சியை நிரந்தரமாக

அமைக்கத் தேவையான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி வளர்மதி ஜெபராஜ்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணையால் இந்த மாமன்றத்தில் அமரக்கூடிய பாக்கியத்தை நான் பெற்றவுடனேயே இதே கேள்வியை நான் கேட்டிருந்தேன். எங்களுடைய கோரிக்கை மட்டுமல்ல, மதுரை மக்களுடைய அனைத்துத் தரப்பு மக்களுடைய கோரிக்கையும் நிரந்தர பொருட்காட்சி அமைய வேண்டும் என்பதுதான். இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அந்தச் சித்திரைப் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்தது நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். அந்த விழாவிலே நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். சித்திரைத் திருவிழா வருடத்திற்கு ஒரு தடவை நடந்தால்தான் பெருமை. அதேபோல் சித்திரைப் பொருட்காட்சியும் ஒரு தடவை நடந்தால்தான் பெருமை என்று சுட்டிக்காட்டினார்கள். அதையே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வழிமொழிந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புவது, நீங்கள் சித்திரைப் பொருட்காட்சியை நிரந்தரமாக அமைக்காவிட்டாலும்கூட, மதுரை மக்களுக்கு நிரந்தரமான கடற்கரைகளோ, இயற்கையாக அமைந்த கடற்கரைகளோ, பெரிய பூங்காக்களோ எதுவுமே கிடையாது—பொழுதுபோக்கு அம்சமாக அமைவதோடு அங்கே படித்துவிட்டு வேலையில்லாமல் தவிக்கின்ற இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டுமுகமாக அமையும் பொருட்டும், அங்கே பெருவாரியான மக்கள் செய்து கொண்டு இருக்கின்ற அந்த வட்டித் தொழிலை இப்பொழுது செய்யமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்களே, அந்த மக்கள் புதிய தொழிலைத் தொடங்குவதற்கு வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு வழிகாட்டும் முகமாகவும் அங்கே நிரந்தர தொழில் கண்காட்சி அமைக்கப்படுமா என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சரிடத்திலேயிருந்து அறிய விரும்புகிறேன்.

2003 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற அந்தக் கோரிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, தொழில் பொருட்காட்சி அமைப்பதற்கு அரசு சிந்திக்கும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாரமலை.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சித்திரைப் பொருட்காட்சி வருடத்திற்கு ஒரு முறை சிறப்பாக தமுக்கம் மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தத் தமுக்கம் மைதானத்திற்குப் பக்கத்திலேயே சட்டக் கல்லூரிக்கு அருகில் தல்லாகுளம் என்ற ஒரு குளம் இருக்கிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பதில் முடிகிற வரைக்கும் வினா-விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. க. பாரமலை: அந்தத் தல்லாகுளத்தாலே பாசனம் பெறும் நிலங்கள் எல்லாம் இப்போது வீடுகளாக மாறிவிட்டன. ஆனால் தல்லாகுளம் பகுதியில் ஏறக்குறைய 100 ஏக்கருக்கு அதிகமான பரப்பு இருக்கிறது. அதில் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமிப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இருக்கின்ற பகுதியை மீட்டு 50 ஏக்கருக்கு அதிகமாக இருக்கின்ற பகுதிகளிலே நிரந்தரமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஒரு நிரந்தர பொருட்காட்சியை மதுரையில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வைத்திருக்கின்ற கோரிக்கையின் அடிப்படையில் நிச்சயமாக அரசு இதைச் சிந்திக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.